**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 28/2013**

DW 1 – செல்வமணி (எ) மகாராஜன்
நாள் – 11.12.2023.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

16.03.1954 தேதியிட்ட பாகப்பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு வீட்டு வரி செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ.2** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை -5). மின் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.3** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை -3). 06.09.1949 தேதியிட்ட கிரய சாசனத்தின் அசலை தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.04.1987 தேதியிட்ட நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தில் தாவா சொத்திற்கு வழங்கிய பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.09.2012 தேதியிட்ட கணினி சிட்டா தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது). 06.07.2006 தேதியிட்ட கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது **பி.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( வாதி தரப்பில் பி.சா.ஆ 7-ற்க்கு மூல ஆவணம் தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.